# 2025 நினைவுகூரும் நாள் இழைந்திணைதல் மாநாட்டிற்கான முக்கிய வாசகங்கள்

வேதாகமம், அதிதூய்மையும் அதிபரிசுத்தமுமான விதத்தில், தேவன் கிறிஸ்துவில் மணவாளனாகவும், தேவனின் மீட்கப்பட்ட மக்கள் மணவாட்டியாகவும் இருக்கும் ஒரு பிரபஞ்சமளாவிய தம்பதியின் காதல் காவியமாகும்—கர்த்தருடைய மீட்டுத்திருப்புதலின் இலக்காகும்.

மீட்டுத்திருப்புதலில் கர்த்தருடைய பிரதானமான வேலை, நாம் அவருடைய மகிமையான மணவாட்டியாய் இருக்க நம்மை ஆயத்தமாக்குவதற்கான அவருடைய உண்மையான வேலையாகும்; எபேசியர் 5:26இல் பேசப்படும் தொடர்ச்சியான, குணரீதியான பரிசுத்தமாக்குதல் இல்லாமல், மணவாட்டி ஆயத்தமாக்கப்படுவதற்கான எந்த வழியும் இல்லை; இதனால், வெளிப்பாடு 19:7-9 நிறைவேற்றப்பட எந்த வழியும் இல்லை.

புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளபடி, *முதிர்ச்சியடைதல்* என்ற வார்த்தை, விசுவாசிகள் மறுபடிஜெநிப்பிக்கப்பட்ட நேரத்தில் பெற்றுக்கொண்ட கிறிஸ்துவின் ஜீவனில் முழுவளர்ச்சியடைந்து, பூரணமாக்கப்பட்டிருப்பதைக் குறிக்கிறது.

கர்த்தருடைய மீட்டுத்திருப்புதல், கிறிஸ்துவினுடைய மணவாட்டியை ஆயத்தமாக்குவதற்காக இருக்கிறது; உச்சநிலையாக, நாம் அற்புதமான சூலமித்தியாய் இருக்க ஒத்தசாயலாக்கப்படுவோம், சாலொமோனின் நகலாக இவள், கிறிஸ்துவின் இணைபாதியாகிய மணவாட்டியாகப் புதிய எருசலேமின் மாபெரும், உச்சநிலையான சித்திரமாய் இருக்கிறாள்.

மே 23-26, 2025 நினைவுகூரும் நாள் இழைந்திணைதல் மாநாட்டிற்கான
செய்திக்குறிப்பு

## பொதுவான கருப்பொருள்:
## மணவாட்டி ஆயத்தமாக்கப்படுதல்

செய்தி ஒன்று

### மணவாட்டி—கர்த்தருடைய மீட்டுத்திருப்புதலின் இலக்கு

வேத வாசிப்பு: வெளி. 19:7-9; யோவா. 1:29; 3:29; உ.பா. 1:2-3; 8:14

**I. வேதாகமம், அதிதூய்மையும் அதிபரிசுத்தமுமான விதத்தில், தேவன் கிறிஸ்துவில் மணவாளனாகவும், தேவனின் மீட்கப்பட்ட மக்கள் மணவாட்டியாகவும் இருக்கும் ஒரு பிரபஞ்சமளாவிய தம்பதியின் காதல் காவியமாகும்—யோவா. 3:29; மத். 25:6; வெளி. 19:7; 21:2; 22:17:**

A. நூற்றாண்டுகள்தோறும், தேவனுக்கு மனிதனுடன் ஒரு காதல் இருந்துவந்துள்ளது; ஓர் இணைபாதியைப் பெற வேண்டும் என்ற குறிக்கோளுடன்தான் அவர் மனிதனைச் சிருஷ்டித்தார்—ஆதி. 1:26.

B. தேவன் ஒரு காதலர், அவர் மனிதனைத் தம்முடைய சாயலில் ஒரு காதலனாக சிருஷ்டித்தார்; நாம் அவரை அன்புகூரும்படி அவர் நம்மைச் சிருஷ்டித்தார் என்பதே இதன் அர்த்தம்—மாற்கு 12:30; எபே. 3:14-19.

C. முழு வேதாகமமும் ஒரு தெய்வீகக் காதல் காவியமாகும், உன்னதப்பாட்டு இந்தக் காதல் காவியத்தின் சுருக்கமான வடிவமாகும்—1:2-3; 8:14:

1. வேதாகமம் ஒரு காதல்நயமான புத்தகம், கர்த்தருடனான நம் உறவு மேலும் மேலும் காதல்நயமாக வேண்டும்.
2. நமக்கும் கர்த்தராகிய இயேசுவுக்கும் இடையே காதல் இல்லையென்றால், நாம் மதரீதியான கிறிஸ்தவர்கள், காதல்நயமான கிறிஸ்தவர்கள் அல்ல—உன். பா. 1:2-3.
3. *காதல்* என்பது தெய்வீகக் காதலாடுதலைப் பற்றிய ஒரு வார்த்தை; வேதாகமத்தில் தேவன் நம் அன்பை நாடிக்கொண்டிருக்கிறார் என்று நாம் காண்கிறோம்—2 கொரி. 11:2.
4. உன்னதப்பாட்டு ஒரு காதல் காவியத்தைவிட மேலானது; அது ஓர் அருமையான காதல் காவியமாகும்.

D. நாம் எதை நேசிக்கிறோமோ, அதின்மீது நம் முழு இருதயமும், நம் முழு ஆள்தத்துவமும்கூட பொருத்தப்படுகிறது, அதினால் ஆக்கிரமிக்கப்பட்டு உடைமையாக்கப்படுகிறது—1 தீமோ. 6:10-11; 2 தீமோ. 3:2-4; 4:8, 10; தீத்து 1:8:

1. “தேவனிடம் அன்புகூருவதென்றால், நம் முழு ஆள்தத்துவத்தையும்—இருதயம், ஆத்துமா, மனம், பலம் ஆகியவற்றுடன் ஆவி, ஆத்துமா, சரீரத்தை (மாற். 12:30)—முற்றிலும் அவர்மீது பொருத்துவதாகும், அதாவது, நம் முழு ஆள்தத்துவமும் அவரால் ஆக்கிரமிக்கப்பட்டு, அவரில் தொலைந்துபோகும்படி அனுமதிப்பதாகும்” (1 கொரி. 2:9இல் அடிக்குறிப்பு 3).
2. கர்த்தராகிய இயேசுவை அன்புகூர்வதென்றால், அவரைப் பாராட்டுவதும், நம் ஆள்தத்துவத்தை அவரிடம் வழிநடத்துவதும், அவருக்குத் திறப்பதும், அவரை அனுபவித்துமகிழ்வதும், அவருக்கு முதலிடம் கொடுப்பதும், அவருடன் ஒன்றாக இருப்பதும், அவரை வாழ்வதும், அவராகவே ஆவதுமாகும்—மத். 26:6-13; 2 கொரி. 3:16; மாற். 12:30; கொலோ. 1:18; 1 கொரி. 6:17; பிலி. 1:20-21; *பாடல்கள்,* #477, சரணம் 2.

**II. வெளிப்பாடு 19:7-9 கிறிஸ்துவை மணவாளனாகத் திரைநீக்குகிறது:**

A. செம்மறிக்குட்டியானவரின் கல்யாணம், கிறிஸ்துவினுடைய சட்டரீதியான மீட்பின்மூலமும் அவருடைய தெய்வீக ஜீவனில் நடக்கும் ஜீவாதார இரட்சிப்பினாலும், அவருக்காக சபையாகிய ஒரு மணவாட்டியைப் பெறவேண்டுமென்ற, தேவனுடைய புதிய ஏற்பாட்டுப் பொருளாட்சியினுடைய நிறைவேற்றத்தின் விளைவாகும்—ஆதி. 2:22; ரோ. 5:10; வெளி. 19:7-9; 21:2, 9-11.

B. வெளிப்பாடு 19இலுள்ள கிறிஸ்துவின் மணவாட்டி, எல்லா ஜெயங்கொள்பவர்களாலும் தொகுக்கப்படுகிறாள்—வவ. 7-9; ஒப். ஆதி. 2:22; மத். 16:18.

C. எல்லா ஜெயங்கொள்பவர்களும் கிறிஸ்துவின் மணவாட்டியாய் ஆயிரம் ஆண்டுகளுக்கு, ஆரம்பமும் பசுமையுமான நிலையில் புதிய எருசலேமாக இருப்பார்கள்—வெளி. 19:7.

D. இறுதியில், எல்லா விசுவாசிகளும் ஜெயங்கொள்பவர்களுடன் சேர்ந்து, நித்தியத்திற்கும் புதிய வானம் மற்றும் புதிய பூமியில் கிறிஸ்துவின் மனைவியாக புதிய எருசலேமை முழுமையாக முழுநிறைவுசெய்து பூர்த்தியாக்குவார்கள்—21:2, 9-11.

**III. மணவாட்டியே கர்த்தருடைய மீட்டுத்திருப்புதலின் இலக்கு—19:7-9:**

A. “செம்மறிக்குட்டியானவரின் கல்யாணம் வந்துவிட்டது”—வ. 7:

1. யோவான் தன் சுவிசேஷத்தின் ஆரம்பத்தில், செம்மறிக்குட்டியானவரையும் மணவாளனையும் பற்றிப் பேசுகிறான், வெளிப்பாடு புத்தகத்தில் அவன் செம்மறிக்குட்டியானவரின் கல்யாணம் வந்துவிட்டது என்று கூறுகிறான்—யோவா. 1:29; 3:29.
2. பெரும்பான்மையான பரிசுத்தவான்களின் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கும் (வெளி. 14:16; 1 தெச. 4:15-16), வெகுமதியளிப்பதற்காகக் கிறிஸ்துவின் நியாயாசனத்தில் தரப்படும் நியாயத்தீர்ப்புக்கும் பிறகு (வெளி. 11:18; 2 கொரி. 5:10) உடனே தொடர்ந்து வரும் நிகழ்வுகள், செம்மறிக்குட்டியானவரின் கல்யாணத்தை உள்ளடக்க வேண்டும் (வெளி. 19:7):
   a. கிறிஸ்துவின் நியாயாசனத்தில் நமக்கு வெகுமதியளிக்கப்பட்டால், நாம் திருமண விருந்தில் பங்கேற்போம்.
   b. நமக்கு வெகுமதியளிக்கப்படாமல், நாம் கர்த்தரால் நிராகரிக்கப்பட்டால், நாம் அழிந்துபோகமாட்டோம், ஆனால் 1 கொரிந்தியர் 3:15இல் விவரிக்கப்பட்டுள்ளதைப் போன்ற ஓர் இழப்பைச் சந்திப்போம்.

B. "அவருடைய மனைவி தன்னை ஆயத்தப்படுத்திவிட்டாள்"—வெளி. 19:7:

1. *அவருடைய மனைவி* என்பது கிறிஸ்துவின் மணவாட்டியாகிய (யோவா. 3:29) சபையைக் குறிக்கிறது (எபே. 5:24-25, 31-32).
2. வெளிப்பாடு 19:8-9இன்படி, மனைவியில், அதாவது, கிறிஸ்துவின் மணவாட்டியில், ஆயிரவருட யுகத்தின்போதுள்ள ஜெயங்கொள்ளும் விசுவாசிகள் மட்டுமே அடங்குவர்; அப்படியிருக்க 21:2இலுள்ள மணவாட்டி, அதாவது, மனைவி ஆயிரவருட யுகத்திற்குப் பிறகு நித்தியத்திற்கும், இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான்கள் அனைவராலும் தொகுக்கப்படுகிறாள்.
3. மணவாட்டியின் ஆயத்தநிலை, ஜெயங்கொள்பவர்களுக்கு ஜீவனில் உள்ள முதிர்ச்சியைச் சார்ந்திருக்கிறது— 19:7; எபி. 6:1; பிலி. 3:12-15; எபே. 4:11.
4. நாம், பிதாவாகிய தேவனைப் பொன்னாகவும், குமாரனாகிய தேவனை முத்தாகவும், ஆவியானவராகிய தேவனை விலையேறப்பெற்ற கற்களாகவும் கொண்டு கிறிஸ்துவின் மணவாட்டியாகப் புதிய எருசலேமை அலங்கரித்து, முழுநிறைவாக்க வேண்டும்.
5. ஜெயங்கொள்பவர்கள் தனித்தனி நபர்கள் அல்ல, மாறாக, ஒரு கூட்டு மணவாட்டி.
6. ஜெயங்கொள்பவர்கள் ஜீவனில் முதிர்ச்சியடைந்தவர்களாக மட்டுமல்லாமல், ஒரே மணவாட்டியாய், ஒன்றாகக் கட்டப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

C. "பிரகாசமும் சுத்தமுமான மெல்லிய சணல்நார் ஆடை அணியும்படி அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது; அந்த மெல்லிய சணல்நார் ஆடை பரிசுத்தவான்களின் நீதிகளாம்"—வெளி. 19:8:

1. *சுத்தமான* என்பது சுபாவத்தைக் குறிக்கிறது, *பிரகாசமான* என்பது வெளியாக்கத்தைக் குறிக்கிறது.
2. “நீதிகள்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை “நீதியான செயல்கள்” என்றும் மொழிபெயர்க்கப்படக்கூடும்.
3. நீதிகள் என்பது நம் இரட்சிப்புக்காக நாம் பெற்றுக்கொண்ட நீதியைக் குறிக்காது—1 கொரி. 1:30.
4. நம் இரட்சிப்புக்காக நாம் பெற்றுக்கொண்ட நீதி புறம்சார்ந்தது, அது நீதியுள்ள தேவனின் கோரிக்கையைப் பூர்த்திசெய்ய நமக்குத் திறனளிக்கிறது, அப்படியிருக்க வெளிப்பாடு 19:8இல் ஜெயங்கொள்ளும் பரிசுத்தவான்களின் நீதிகள் அகம்சார்ந்தவை (பிலி. 3:9), அவை ஜெயங்கொள்ளும் கிறிஸ்துவின் கோரிக்கையைப் பூர்த்திசெய்ய அவர்களுக்குத் திறனளிக்கின்றன.
5. இவ்வாறு, மெல்லிய சணல்நார் ஆடை நம் ஜெயங்கொள்ளும் வாழ்க்கையை, நம் ஜெயங்கொள்ளும் ஜீவியத்தைச் சுட்டிக்காட்டுகிறது; அது நம் ஆள்தத்துவத்திலிருந்து நாம் வாழ்ந்துகாட்டுகிற கிறிஸ்து.

D. “...செம்மறிக்குட்டியானவரின் கல்யாண இராவிருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்...இவை, தேவனுடைய சத்தியமான வார்த்தைகள்...”—வெளி. 19:9:

1. செம்மறிக்குட்டியானவரின் கல்யாண இராவிருந்து என்பது, ஜெயங்கொள்ளும் விசுவாசிகளுக்கான ஒரு வெகுமதியாக, தேவனுடைய பார்வையில் ஒரு நாளாயிருக்கும் ஆயிரவருட இராஜ்ஜியமான திருமண விருந்தாகும்—வ. 9; மத். 22:2, 11-14; 2 பேது. 3:8.
2. ஜெயங்கொள்ளும் விசுவாசிகளை ஆயிரவருட யுகத்தின் அனுபவமகிழ்ச்சிக்குள் வரவழைக்கப்போகும் கிறிஸ்துவின் கல்யாண இராவிருந்துக்கு அழைக்கப்படுவதென்றால், பாக்கியவான்களாய் இருப்பதாகும்—வெளி. 19:9.
3. வெளிப்பாடு 19:9இலுள்ள செம்மறிக்குட்டியானவரின் கல்யாண இராவிருந்தே, மத்தேயு 22:2இலுள்ள திருமண விருந்தாகும்; இது ஜெயங்கொள்ளும் விசுவாசிகளுக்கு ஒரு வெகுமதியாக இருக்கும்:
   a. அழைக்கப்படுவதென்றால் இரட்சிப்பைப் பெறுவதாகும் (ரோ. 1:7; 1 கொரி. 1:2; எபே. 4:1), அப்படியிருக்க, தெரிந்துகொள்ளப்படுவதென்றால், ஒரு வெகுமதியைப் பெறுவதாகும்.
   b. ஜெயங்கொள்பவர்கள் மட்டுமே, அவர்களுக்கான ஒரு வெகுமதியாகத் திருமண இராவிருந்துக்கு அழைக்கப்படுவார்கள்; இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவரும் அதில் பங்குபெறுவதில்லை.
   c. செம்மறிக்குட்டியானவரின் கல்யாண இராவிருந்துக்கு அழைக்கப்படப்போகிற ஜெயங்கொள்ளும் விசுவாசிகள், செம்மறிக்குட்டியானவரின் மணவாட்டியாகவும் இருப்பார்கள்—வெளி. 19:8-9.